Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk
தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, NOVEMBER 10, 2022
வியாழக்கிழமை நவம்பர் 10, 2022 | ஒளி: 08 கதிர் 140 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE




# மாணவர் துன்புறுத்தலை தடுக்க புதிய சட்டங்கள்

பாடசாலைகளில் மாணவர்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்கும் சட்டங்களை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் தயாரிக்கவுள்ளதாகவும் அதற்காக குழுவொன்றையும் நியமிக்கவுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது. தொடர்ச்சி P2

# கூடியது குரங்கம்மை

## தடுப்பூசிகள் இல்லை: அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

இலங்கையில், குரங்கு அம்மை தொற்றுக்குள்ளான நபரொருவர் கடந்த 1ஆம் திகதி அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், தொற்றுக்குள்ளான இரண்டாவது நபரும் கண்டறியப்பட்டுள்ளார் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

டுபாயில் இருந்து வருகை தந்த நபரொருவருக்கே தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறிப்பட்டுள்ளதாகவும் அவர் தற்போது, தேசிய தொற்று நோய் தடுப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர்ச்சி P2





## ஐ.எம்.எப்பில் அச்சுறுத்தும் விடயங்களே உள்ளன

■ பா.நிரோஸ்

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் மக்களை அச்சுறுத்தும் விடயங்களே உள்ளன, இதனாலேயே அந்த உடன்படிக்கை தொடர்பான விடயங்களை அரசாங்கம் வெளியிட தயங்குகின்றது என்று ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (9) நடைபெற்ற சில வரி திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கையில் மக்களை பயமுறுத்தும் விடயங்களே இருக்கின்றன. அதனால்தான் அதனை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சர் எதிர்ப்பு தெரிவித்தார். தொடர்ச்சி P2

## கணினி கோளாறு காரணமாக
## விமான நிலையத்திலும் 5 மணிநேரம் அமளிதுமளி

கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு பிரிவிலுள்ள கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, விமான நிலையத்தில் நேற்று (09) சுமார் 5 மணி நேரம் வரை அமளிதுமளி ஏற்பட்டது. தொடர்ச்சி P2



## இறுதி போட்டிக்குள் நுழைந்தது பாகிஸ்தான்

Full story P8



## TANTEA குறித்து பாக்லேயை சந்தித்து இ.தொ.கா பேச்சு

இந்திய உயர்ஸ்தானிகளர் கோபால் பாக்லேவுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடல் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் நேற்று (09) இடம்பெற்றது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு புலம்பெயர்ந்து, TANTEA தோட்டங்களில் குடியேறியுள்ள பெருந்தோட்ட சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினை தொடர்பாக இந்த கலந்துரையாடலில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. தொடர்ச்சி P2




## நீர்வேளாண்மை மூலம்
## பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பு

இலங்கையின் பொருளாதாரத்துக்கு இறால் வளர்ப்பு கணிசமான பங்களிப்பு செய்வதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கொறோனா பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இறால் வளர்ப்பின் மூலம் கடந்த வருடம் சுமார் 43 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## 303 இலங்கையரையும் ஐ.நாவில் பாரப்படுத்தவும்

■ பா.நிரோஸ்



இலங்கையிலிருந்து கனடாவுக்கு செல்ல முயற்சித்து கடலில் தத்தளித்த நிலையில் வியட்னாம் அருகே மீட்கப்பட்ட 303 இலங்கையரையும் ஐ.நாவில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார். தொடர்ச்சி P2

## கந்தக்காடு முகாமிலிருந்து தப்பியோடியவர்களில்
# 24 பேர் மாயம்

### 213 பேரை நீதிமன்றில் ஒப்படைத்துள்ளோம் : புனர்வாழ்வு ஆணையாளர்

கந்தக்காடு முகாமில் இருந்து தப்பியோடியவர்களில் 213 பேரை அடையாளம் கண்டு அவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளதாகவும், மேலும் 24 பேர் மாயமாகியுள்ளனர் எனவும் , அவர்களை தேடும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். தொடர்ச்சி P2



## ஐ.எம்.எப் ஒப்பந்தம் இருக்கிறது வெளிப்படுத்தினால் லொத்தராகும்

■ பா.நிரோஸ்

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க வரியை எவ்வாறு அதிகரிக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தன்னிடம் அந்த ஒப்பந்தம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஊழியர் மட்ட ஒப்பந்தம் எம்மிடம் இருக்கிறது. ஜனாதிபதி சில குழுக்களின் தலைவர்களுக்கு இதனை வழங்கியிருக்கிறார். இதனை நான் சபைப்படுத்தப்போவதில்லை. தொடர்ச்சி P2



## 780 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில்
## கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய நிர்மாண பணிகள் ஆரம்பமாகின

### 51 சதவீதம் அதானி நிறுவனத்துக்கு : 49 சதவீதம் இலங்கைக்கு

இந்தியாவின் அதானி நிறுவனத்தின் 780 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய நிர்மாணப்பணிகள் நேற்று (9) ஆரம்பமாகின. இதில் 51 சதவீத பங்குகள் அதானி நிறுவனத்துக்கும், ஜோன் கீலெஸ் தனியார் நிறுவனத்துக்கு 34 சதவீத பங்குகள், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு 15 சதவீத பங்குகள் என்ற அடிப்படையில் உரித்தாகின்றன. தொடர்ச்சி P2

## மாணவர்கள் சித்திரவதை: அதிபர் பணி இடைநீக்கம்

பாணந்துறை, மில்லனிய குங்கமுவ கனிஷ்ட பாடசாலை மாணவர்களை சித்திரவதை செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அதிபரை பணி இடைநீக்கம் செய்துள்ளதாக மேல் மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

## ஜனாதிபதி சபாநாயகரை அச்சுறுத்தவில்லை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அச்சுறுத்தவில்லை. அவரிடம் வேண்டுகோள்தான் விடுத்தார் என அரச தரப்பு பிரதம கொரடாவான தொடர்ச்சி P2



## கடன் மறுசீரமைப்பு குறித்த கலந்துரையாடலில்
## சாதகமான பதில் கிடைக்கும்

### ஜோர்ஜீவாவிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

■ ஆர்.யசி

சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான தொடர்ச்சி P2



## வடக்கு மீனவர்கள்
## போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடக்கூடாது

### நாகவிகாரை விகாராதிபதி ஆலோசனை

வடக்கு மீனவர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடக்கூடாது, அவ்வாறு ஈடுபடுவோர் தொடர்பில் தகவல் கிடைத்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என யாழ் ஆரியகுளம் நாகவிகாரையின் விகாராதிபதி வடக்கு மீனவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

ஆரிய குளம் நாகவிகாரை விகாராதிபதியை வடக்கு மீனவர்கள் நேற்று (9) சந்தித்து கலந்துரையாடிய பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஐ.எம்.எப்பில் அச்சுறுத்தும் விடயங்களே உள்ளன

நாணய நிதியத்தின் உடன்படிக்கைக்கு அமையவே அரசாங்கம் வரி அதிகரிப்புகளை மேற்கொண்டு வருகின்றது. மக்களை அச்சுறுத்தும் விடயங்கள் இல்லை என்றால் அதனை வெளிப்படுத்த அரசாங்கம் ஏன் அச்சப்படவேண்டும்.

அதனால் அரசாங்கம் அந்த உடன்படிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும். அதேபோன்று ரணில் விக்ரமசிங்க இதற்கு முன்னர் இதற்காக குரல் கொடுத்துவந்த நிலையில் தற்போதே நிதி அமைச்சராக இருந்து அவரே இதனை மக்களுக்கு மறைப்பது தார்மிகமான நடவடிக்கை அல்ல என்றார்.

## TANTEA குறித்து பாக்லேயை சந்தித்து இ.தொ.கா பேச்சு

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்து சென்றவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் கூட்டுப் பொறுப்பு இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு அரசாங்கங்களுக்கும் உண்டு.

மேலும் மலையகத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டிய 10,000 வீடுகள் குறித்தும், பெருந்தோட்ட இளைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் இந்திய ஆசிரியர்களை நியமித்து,புதிய பாடநெறிகள் ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இ.தொ.காவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் அரசியல் பிரிவுக்கான முதன்மைச் செயலாளர் திருமதி பானு ஆகியோர் தெரிவித்தனர்.

## ஐ.எம்.எப் ஒப்பந்தம் இருக்கிறது வெளிப்படுத்தினால் லொத்தராகும்

சில இரகசியமான விடயங்கள் வெளியில் சென்றமையாலேயே சீனி ஊழல் இடம்பெற்றது. எனவே இதனை நான் சபைப்படுத்தப்போவதில்லை எனவும் தெரிவித்தார். ஐ.எம். எப்பின் கடனைப் பெற்றுக்கொள்ள வரி அதிகரிப்புகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென ஊழியர் மட்ட ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் இந்த ஒப்பந்தம் இருந்தாலும் இதனை நான் வாசிக்கவோ அல்லது வெளிப்படுத்தவோ போவதில்லை எனவும் கூறினார்.

மேலும், சீனி வரி குறைப்புக்கு இரகசியங்கள் கசிந்தமையே காரணம் என்பதுபோல, ஐ.எம்.எப்புடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஊழியர் மட்ட உடன்படிக்கையை இப்போது நான் வெளிப்படுத்தினால் அது சிலருக்கு லொத்தராக இருக்கும் எனவும் தெரிவித்தார். ஐ.எம்.எப்தொடர்பான அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் வரி அதிகரிப்புகள் தொடர்பில் கலந்துரையாட முடியும்என்றார்.

## மாணவர்கள் சித்திரவதை: அதிபர் பணி இடைநீக்கம்

ஆசிரியரொருவரின் பணத்தை திருடியதாகக் குற்றஞ்சாட்டி, ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலரை தாக்கியமை தொடர்பில், 3 பொலிஸ் அதிகாரிகள், அதிபர் மற்றும் பிரதி அதிபர் ஆகியோர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த மாணவர்களை நூலகத்துக்குள் அழைத்துச் சென்று அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோர் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், அவர்களை ஜீப்பில் அழைத்துச் சென்ற போது மின்சாரம் தாக்கியதாக மாணவர்கள் வழங்கிய வாக்குமூலத்துக்கு அமைய பொலிஸ் ஜீப் வண்டி தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் அறிக்கையொன்றை பெறவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டது.

அவர்கள் ஐவரையும் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (08) ஆஜர்படுத்திய போது, அதிபர், பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், பிரதி அதிபர் மற்றும் பொலிஸ் ஜீப்பின் சாரதி (கான்ஸ்டபிள்) ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# கூடியது குரங்கம்மை

தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தால் முன்னெடுக்கப்பட்ட சோதனைக்கு அமைய, குறித்த நபர், குரங்கு அம்மை தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, டுபாயிலிருந்து கடந்த முதலாம் திகதி நாட்டுக்கு வருகை தந்த 20 வயதான இளைஞர் ஒருவர் தொற்றுக்கு உள்ளாகி தேசிய தொற்று நோய் தடுப்புப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சமூக நோய்த்தொற்றுக்கு உள்ளாகியுள்ள சந்தேகத்தின் அடிப்படையில், சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட குறித்த இளைஞரிடம் பெறப்பட்ட மாதிரிகள், தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே குறித்த இளைஞருக்கு குரங்கம்மை நோய் தொற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, குரங்கு அம்மை அல்லது பெரியம்மை தொற்றுக்கான தடுப்பூசிகள் நாட்டில் இல்லாத காரணத்தால் அவதானமாக செயற்படுமாறு வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் என்றும் அம்மைக் கொப்புளங்கள் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்ப்பிணிகள் மற்றும் 8 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தொற்றின் தாக்கம் வீரியமாக இருக்கும் என்றும் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## 303 இலங்கையரையும் ஐ.நாவில் பாரப்படுத்தவும்

இலங்கையிலிருந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அவர்கள் சென்றிருக்கிறார்கள். அவர்கள் கனடா செல்ல முயற்சித்திருப்பதாக நினைக்கிறேன். சரியோ பிழையோ இவர்கள் அனைவரையும் ஐக்கிய நாடுகள் சபையிடம் பாரப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுப்பதாகவும், 264 ஆண்களும் 19 பெண்களும் 20 சிறுவர்களும் இருக்கிறார்கள். ஜனாதிபதி நினைத்தால் அவர்களை ஐ.நாவுக்குப் பாரப்படுத்த முடியும் என்றார்.

நாட்டில் அதிகளவான வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் மோசடிகள் தொடர்வதால் வரி திருத்தங்களுக்கான பிரதிபலன்கள் கிடைப்பதில்லை. ஆட்சியாளர்கள் மோசடிக்காரர்களை தங்கியே ஆட்சி செய்யும் நிலை இருக்கிறது. சீனி, வெள்ளைப்பூண்டு உள்ளிட்ட வரி ஊழல் மோசடியிலிருந்து முழுமையான விசாரணைகள் செய்து அப்பணத்தை மீள அரசாங்கத்துக்குப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## 24 பேர் மாயம்

கந்தக்காடு புனர்வாழ்வு முகாமிற்கு வரும் நபர்கள் மிக மோசமான அளவில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். போதைப்பொருள் பாவனைக்காக தமது சொந்த உறவுகளையே கொலைசெய்ய துணியும் கொடூரமான மனநிலையை கொண்டவர்கள். அவர்களே இவ்வாறான புனவர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான போதைப்பொருள் அடிமைகளினால் ஒரு நாளைக்கு குறைந்தது 1500 ரூபாயில் இருந்து 5000 ரூபாய் வரையில் போதைப்பொருள் பெற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறான நபர்களையே நாம் புனர்வாழ்வளித்து வெளியில் அனுப்புகின்றோம். ஆகவே ஒரு தடவையில் இவ்வாறு 1500க்கும் அண்ணளவாக நபர்களை புனர்வாழ்வுக்கு உற்படுத்துவதால், போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவர்கள் அதனை ஈடுசெய்ய மாற்று வழிகளை கையாளக்கூடும். அதனால் தான் சிறைக்குள்ளும் போதைப்பொருள் கோஷ்டிகளை அனுப்பி இவ்வாறான திட்டமிட்ட சதிகளை செய்கின்றார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது.

நாடளாவிய ரீதியில் ஐஸ் போதைப்பொருள் வேகமாக பரவியுள்ளது. ஏனைய போதைப்பொருட்களை விடவும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் போதைப்பொருளாகவே இது அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனை பாவிக்கும் நபரின் மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் சமூகத்தையும் இது மோசமாக பாதிக்கும். இதன் விளைவுகள் எவ்வாறானதாக அமையும் என்றால், கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தில் ஏற்பட்ட அழிவை விடவும் பாரிய அளவிலான அழிவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பு

கொழும்பில் நடைபெற்ற 'உயிரியல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றின் ஊடாக நிலைபேறான நீர்வேளாண்மை' எனனும் தொணிப் பொருளிலான செயலமர்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே குறித்த தகவலைத் தெரிவித்துள்ளார்

நீர்வேளாண்மை எனப்படுகின்ற பண்ணை முறையிலான கடலுணவு உற்பத்தி, பருவகால மற்றும் நன்னீர் மீன் போன்றன வளர்ப்பு முறைகள் உணவுப் பாதுகாப்பினை அதிகரித்துக் கொள்வதற்கான சிறந்த வழிவகையாக காணப்படுகின்றது. குறிப்பாக கடலுணவு உற்பத்திகளை அதிகளவில் உண்பதன் மூலம் தேவையானளவு புரதத்தினை பெற்றுக் கொள்ள முடியும். நீர்வேளாண்மை என்பது பல்வேறு உற்பத்தி முறைகளையும் வெவ்வேறான நீரியல் சூழல்களையும் கொண்ட உற்பத்தியாக இருக்கின்ற போதும், நீர்வேளாண்மையை நிலைபேறானதாக மேம்படுத்திக் கொள்வதில் பல்வேறு நாடுகளும் ஆர்வம் செலுத்தி வருகின்றன.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பினை செய்யும் வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் 2021 ஆம் ஆண்டு சுமார் 14,414 மெற்றிக்தொன் இறால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் 43 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது.

நாரா நிறுவனத்தின் மேற்பார்வையில் தொற்று நோய் பிரிவு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள முடியும் என்று நம்புகின்றேன்" என்றார்.

## கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய நிர்மாண பணிகள் ஆரம்பமாகின

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோரின் தலைமையில் இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அடுத்த 3 வருடங்களுக்குள் மேற்கு முனைய நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய, இரண்டு கட்டங்களில் முன்னெடுக்கப்படும் இதன் அபிவிருத்திப்பணிகளில் முதற்கட்ட பணிகள் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் திகதி முடிவுக்கு வரும் எனவும், இரண்டாம் கட்டப்பணிகள் 2026ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முடிவுக்கு கொண்டுவரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக 780 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அதானி குழுமம் முதலீடு செய்துள்ளது.

இலங்கை- இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முக்கிய சந்திப்பு புள்ளியாகவே இதனை தாம் கருதுவதாகவும், இந்த வேலைத்திட்ட த்தால் இரண்டு நாடுகளுக்கும் பாரிய இலாபம் கிடைக்கும் எனவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார் . இந்த அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பது குறித்து நீண்ட காலமாக கலந்துரையாடி வந்த நிலையில் இப்போது அதற்கான பணிகளை முன்னெடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## மாணவர் துன்புறுத்தலை தடுக்க புதிய சட்டங்கள்




மாணவர்கள் உடல் ரீதியாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதை தடுப்பதற்கு, தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை என்று ஆய்வுகள் மற்றும் கருத்துக்கணிப்பில் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை குற்றவியல் தண்டனை சட்டக்கோவையில், சிறுவர்கள் தொடர்பான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவும் 1995 ஆண்டின் 22 ஆம் இலக்க 308 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களுக்கு மேலதிகமாக உப சரத்துகளை கொண்டு வருவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டவுடன், அதனை பொதுமக்கள், சிவில் அமைப்புகள், கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினர்களுக்கு கையளித்து இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்ட பின்னர், சட்ட வரைஞர் திணைக்களத்திடம் ஒப்படைக்க அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களால் மாணவர்கள் தாக்கப்படுவதுடன், மாணவத் தலைவர்களாலும் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் நாட்டில் பதிவாகி வருகின்றன.

அத்துடன், சில மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நிலைமைகள் ஏற்படுவதைத் தொடர்ந்தே அதிகார சபை சட்டங்களை தயாரிப்பதற்கு தீர்மானித்துள்ளது

## விமான நிலையத்திலும் 5 மணிநேரம் அமளிதுமளி

கணினிக் கோளாறு காரணமாக, குடிவரவு மற்றும் குடிவரவு பணிகளை அதிகாரிகள் மனிதவலு மூலம் மேற்கொள்ளத் தொடங்கியதையடுத்து ஏற்பட்ட தாமதம் காரணமாகவே நெருக்கடி நிலவியதாக தெரியவருகிறது.

காலை 9 மணியளில் கட்டமைப்பு செயலிழந்ததுடன், பிற்பகல் 1 மணியளவில் கணினிக் கட்டமைப்பு வழமைக்கு திரும்பியதாக திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளரும் ஊடகப் பேச்சாளருமான பியூமி பண்டார தெரிவித்திருந்தார்.

மேலும், தங்களது சேவைகளை விரைவாக பெற்றுக் கொள்ள வருகை மற்றும் புறப்பாட்டு பகுதிகளுக்கு வந்த பயணிகள் முயன்றதால் நெரிசல் ஏற்பட்டதையடுத்து, பயணிகளை கட்டுப்படுத்த பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

கணினிக் கட்டமைப்பை சீர்செய்ய விமான நிலைய அதிகாரிகள் பிரயத்தம் மேற்கொண்டிருந்த போதும் நெரிசலை கட்டுப்படுத்தத முடியாமல் போனதாலேயே பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளுக்கு அழைக்கப்பட்டனர்.

இதேவேளை, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கணினிக் கோளாறு காரணமாக சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

அந்தக் கோளாறு ஏற்பட்டு ஒரு நாளைக்குள்ளேயே விமான நிலையத்தில் இயங்கும் திணைக்களத்தின் பிரிவிலும் குறித்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனினும், திணைக்களத்தின் தலைமையகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் சேவைகள் நேற்று முதல் மீள ஆரம்பிக்க ப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளரும் ஊடகப் பேச்சாளருமான பியூமி பண்டார தெரிவித்திருந்தார்.

## ஜனாதிபதி சபாநாயகரை அச்சுறுத்தவில்லை

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (9) ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி, பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு சபாநாயகரே பொறுப்பு . அதனால்தான் ஜனாதிபதி கடிதம் ஒன்றின் ஊடாக பாராளுமன்ற நடவடிக்கைகள் மந்த கதியில் செல்கின்றன. அதேநேரம் பாராளுமன்ற நடவடிக்கைகளை துரிதப்ப டுத்த அரச தரப்பினர் விரைவாக செயற்படுவதில்லை என சபாநாயகர்ப த்திரிகை ஒன்றுக்கு தெரிவித்திருக்கின்றார். அவரின் கருத்து சரியானது. ஏனெனில் சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு செய்துகொண்டுள்ள உடன்படிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றோம். அதனை அரசு இன்னும் செய்யவில்லை என்றார்.

இதனைத்தொடர்ந்து எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான புத்திக்க பத்திரன, சபாநாயகருக்கு ஜனாதிபதி எழுதியிருந்த கடிதம் அச்சறுத்தல் விடுக்கும் வகையிலேயே இருப்பதாக எமக்கு விளங்குகின்றது. ஏனெனில் நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த யாரும் எனக்கு தெரிந்த வகையில் இவ்வாறானதொரு கடிதம் சபாநாயகருக்கு எழுதியதில்லை என்றார்.

இந்தக் கருத்துகளுக்கு அரச தரப்பு பிரதம கொரடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க , ஜனாதிபதி சபாநாயகருக்கு அனுப்பி இருந்த கடிதம், அச்சுறுத்தல் கடிதம் அல்ல. பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறவேண்டியவர் என்றவகையில், கட்சித்தலைவர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதமே அது என்றார்.

## போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடக்கூடாது

வடபகுதியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது.ஆனால் அந்த போதை பொருள் இந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே கடற்றொழிலுக்கு செல்லும் மீனவர்கள் தமது படகுகளில் ஏதாவது போதை பொருள் கடத்தப்படுவது தொடர்பில் தகவல் இருந்தால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும்.அத்தோடு மீனவர்களாகிய நீங்கள் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் கடத்தலுக்கு துணை போகக்கூடாது இந்த விடயம் தொடர்பில் மீனவர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.

## சாதகமான பதில் கிடைக்கும்

முயற்சிகளை முன்னெடுப்பதாகவும் ,கடன் மறுசீரமைப்பில் கூடிய கவனம் செலுத்துவதாகவும், அதில் சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

எம்.சி.சி தொடர்பான அரசாங்கத்தின்

# நிலைப்பாடு மாறலாம்

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் எம்.சி.சி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு தீர்மானிக்கவில்லை எனத் தெரிவிக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசின்ஹ, இந்த ஒப்பந்தம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் எடுத்திருந்த நிலைப்பாட்டிலிருந்து, தற்போதைய அரசாங்கம் வேறொரு நிலைப்பாட்டுக்கு வரலாம் எனத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறிவின் வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்வடாறு தெரிவித்தார்.



எம்.சி.சி ஒப்பந்தம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, எம்.சி.சி ஒப்பந்தத்தைக் கையெழுத்திடாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஓர் அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கும், மற்றோர் அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கும் வித்தியாசங்கள் இருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எம்.சி.சி ஒப்பந்தம் தொடர்பில் குழு அமைத்து விரிவாக ஆராயப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதுபோல், தற்போதைய அரசாங்கமும் எம்.சி.சி தொடர்பில் வேறொரு தீர்மானத்தை எடுக்கலாம். எனினும், தற்போதைய அரசாங்கம் எம்.சி.சி ஒப்பந்தம் தொடர்பில் எந்தவிதமான தீர்மானங்களையும் இதுவரையில் எடுக்கவில்லை எனவும் பதிலளித்தார்.

## எம்.சி.சியை எதிர்த்தது சரி

நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டுவர முயலப்பட்ட எம்.சி.சி ஒப்பந்தத்தை எதிர்த்தமை சரி என்கிற நிலைப்பாட்டிலேயே தாம் இன்னும் இருப்பதாக சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சோபா ஒப்பந்தத்தைக் கையெழுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவொரு பாதுகாப்பு ஒப்பந்தம். ஆனால் இதன் பின்னர் எம்.சி.சி ஒப்பந்தத்தைக் கையெழுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் நாட்டுக்குப் பாரதூரமான பல விடயங்கள் இருந்தன. குறிப்பாக திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு பிரத்தியேகமான பொருளாதார வழித்தடமொன்றை அமைக்க எம்.சி.சி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனூடாக இலங்கையின் நிலப்பரப்புகள் தொடர்பான தகவல்களை அவர்களுக்கு வழங்க வேண்டும். இதுபோன்ற காரணங்களாலேயே நாம் இவற்றை எதிர்த்தோம்.

கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு பிரதான பொருளாதார நடைபாதை ஒன்றையும், காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை, வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி என பொருளாதார வழித்தடங்களை அமைக்க



கடந்த நல்லாட்சி அரசாங்கம் தீர்மானித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். மேலும், இந்தப் பொருளாதார வழித்தடங்களை அமைக்க நடவடிக்கை எடுத்தது அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமையவே. எம்.சி.சி ஒப்பந்தத்துக்கும் இதற்கும் தொடர்பில்லை எனவும் கூறினார்.

3 புதிய குழுக்களை பரிந்துரைக்க

## நால்வரடங்கிய குழு

பாராளுமன்றத்தில் புதிதாக அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்று நிலையியல் குழுக்கள் குறித்து மேலும் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைக்க நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைக்க பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்துள்ளார்.

வங்கி தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு ஆகிய மூன்று குழுக்களுமே இவ்வாறு அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான, கலாநிதி ஹர்ஷ த சில்வா, எம்.ஏ சுமந்திரன், சாகர காரியவசம் ஆகியோரே இந்த விசேட குழுவில் நியமிக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

தற்பொழுது நடைமுறையில் உள்ள



நிலையியல் குழுக்களான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு), அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு), அரசாங்க நிதி பற்றிய குழு ஆகிய குழுக்களின் செயற்பாடுகள் இந்தப் புதிய நிலையியல் குழுக்களின் விடயதானங்களுடன் மேற்படுகை செய்கின்றனவா என்பது குறித்து ஆராய்ந்து, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அது பற்றிய பரிந்துரைகளை இந்தக் குழு முன்வைக்கும் என்றார்.

## தூதுவர் அல்-அமீரி சபாநாயகரை சந்தித்தார்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் காலித் நசர் அல்-அமீரி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்தார்.

பல்வேறு அம்சங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. அந்நாட்டின் தேசிய பேரவைக்கு பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்முறை தொடர்பில் விளக்கமளித்த தூதுவர், இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடினார்.

அத்துடன் சிறுவர்கள் மற்றும் பெண்களைப் வலுப்படுத்துவது



தொடர்பிலும், குறிப்பாக வர்த்தகத்துறையில் பெண்களை வலுப்படுத்துவது குறித்தும் இங்கு கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்திசெய்யப் புதுப்பிக்கத்தக்க சக்தியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் குறித்தும் மேலும் கவனம் செலுத்தப்பட்டது.

## சீனி வரி குறைப்பால் 16 பில்லியன் நட்டம்

### நிறுவனங்களுக்கு கொள்ளை இலாபம்

சீனி மீதான வரி குறைப்பால் சீனியை இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் லொத்தர் விழுந்தது போல இலாபமடைந்துள்ளதாக தெரிவிக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடி, அரசாங்கத்துக்கு இதனால் இழக்கப்பட்ட 16 பில்லியன் ரூபாயை மீளப்பெறுவது நடைமுறை சாத்தியமில்லை எனவும் தெரிவித்தார்.

நுகர்வோர், உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காகவே சீனி மீதான வரியை நாம் குறைத்தோம். 2020ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்படும் சீனி ஒரு கீலோ மீது விதிக்கப்பட்டு வந்த வரியை 25 சதவீதமாகக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. பெரிய வெங்காயம் மீதான வரியும் இதுபோல குறைக்கப்பட்டது. 250 கிராம் டின் மீனுக்கான வரி 50 ரூபாயாலும், பருப்பு ஒரு கிலோ கிராமுக்கான வரி 10 ரூபாயாலும் குறைக்கப்பட்டது. நுகர்வோரின் மாதச் செலவை 500 ரூபாயால் குறைப்பதற்காகவே இந்த வரி குறைப்பை அரசாங்கம் செய்தது.

சீனி இறக்குமதியால் அதிகளவான இலாபத்தை குறித்த நிறுவனங்கள் பெற்றுள்ளதால், செலுத்த வேண்டிய வருமான வரியும் அதிகரித்துள்ளது. சட்டப்படி இந்நிறுவனங்களிடமிருந்து 24 சதவீதமான வருமான வரி பெற வேண்டும். எனினும் 30 சதவீதமான வருமான வரியை பெற வேண்டுமென நாம் கோரிக்கை விடுக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

## பார்த்தால் பசுப் பால்

நாளாந்தம் பாராளுமன்றத்தைப் பார்வையிட வருகைதரும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக ஒரு கிளாஸ் பசுப் பாலை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக தெரிவித்துள்ளார். இதற்கு அமைய நாளொன்றுக்கு ஆகக் கூடியது பாடசாலை மாணவ மாணவியர் 500 பேருக்கு அடுத்த வருடத்திலிருந்து இதனை நடைமுறைக்குக் கொண்டுவரவும் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 2023 பட்ஜெட்டை விவாதிப்பது எப்படி?

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்படவுள்ள ஒப்பந்தத்தைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதனைச் சமர்ப்பிக்காது வரவு செலவு திட்டம் மீதான விவாதத்தை எவ்வாறு முன்னெடுப்பது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மெதுவாகச் செல்வதாகக் கூறி ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. எதிர்க்கட்சிகள் கோரும் தகவல்களை ஆளுங்கட்சி வழங்குவதில்லை. இதனாலேயே பாராளுமன்ற செயற்பாடுகள் மெதுவாக முன்னெடுக்கப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா ஊடகமொன்றுக்குப் பதில் வழங்கியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் தொடர்ந்து



கோரிவந்தாலும் இதுவரையில் ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்படவில்லை. அரசாங்கம் தங்களது வேலைகளை மெதுவாகச் செய்துகொண்டு, பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் எதிர்க்கட்சியால் மெதுவாக முன்னெடுக்கப்படுவதாகக் குற்றஞ்சுமத்துகிறது.

அரசாங்கமே பொறுப்பிலிருந்து விலகியுள்ளது. ஐ.எம்.பின் ஒப்பந்தம் எங்கே? ஐ.எம்பின் ஒப்பந்தம் இல்லாது வரவு செலவு திட்டத்தை விவாதிக்க முடியுமா? எனவே, இந்த ஒப்பந்தத்தைப் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்காது ஓர் அங்குலம் கூட முன்னோக்கி நகர முடியாது. எனவே அவற்றை விரைவாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கிரிக்கெட் சபை சூதாட்ட இடமானது

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் அடிக்கடி உபாதைக்கு உள்ளாவது தொடர்பில் ஆராய தெரிவுக்குழுவை அமைக்க வேண்டுமென தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, கிரிக்கெட் சபையை கணக்காய்வுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (09) அமர்வில் கலந்துகொண்டு சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆசிய உலகக் கிண்ணக் கோப்பை போட்டியை இலங்கையில் நடத்துவதற்கான அனுமதியை ஏன் பெற்றுக்கொள்ளவில்லை என நான் பாராளுமன்றத்தில்



ஆற்றிய உரை தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகச் சபை தலைவர் என்னைப் பற்றி கருத்துகளை கூறியிருந்தார்.

ஆசிய உலகக் கிண்ணக் கோப்பை இலங்கையில் நடந்திருந்தால் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருப்பார்கள். இதனூடாக இலங்கைக்கு பெரும் வருமானம் கிடைத்திருக்கும் என்றே நான் கூறியிருந்தேன்.

இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாக சபையின் தலைவர் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்கிறார் என்பதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. இவரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளாலேயே இலங்கை கிரிக்கெட் அணியினர் பல்வேறு நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

## அப்படியேதும் உறுதியளித்துள்ளீர்களா?

இலவச சுகாதாரதுறை மற்றும் கல்வித்துறையை தனியார் மயப்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் உறுதியளித்துள்ளீர்களா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பினார்.

வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட நாட்டை வங்குரோத்து அரசாங்கத்தின் மூலம் மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியம் பாலமாக அமைந்துள்ளது என்று கூறுகின்றனர். அப்படியென்றால் ஏன் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பான அறிக்கையை வெளியிடவில்லை. அந்த ஒப்பந்தத்தில் என்ன உள்ளன. அதனை நாட்டுக்கு வெளிப்படுத்தாது மறைத்து வைத்திருப்பது ஏன்? வரிகளை அதிகரிக்கும் போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளையே செயற்படுத்துகின்றோம் என்று ஜனாதிபதி கூறுகின்றார். அப்படியென்றால் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளனவா? விலை, கட்டண அதிகரிப்புகளுக்கும் இதுவா காரணம்?

அரசாங்கம் ஒப்பந்தங்களை செய்துவிட்டு அவற்றை மறைத்து வைத்துவிட்டு எல்லோரையும் ஒன்றிணையுமாறு கூறுகின்றனர்.

இந்த நாட்டின் இலவச சுகாதார துறை, கல்வித்துறையை தனியார் மயப்படுத்த சர்வதேச நாணய நிதியத்திடம் உறுதியளித்துள்ளீர்களா? சில பிரதான அரச மருத்துவமனைகளில் கட்டணங்களுடன் சில சேவைகளை புதிதாக ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது சுகாதார துறையை தனியார் மயப்படுத்தவதா என்று அரசாங்கத்திடம் கேட்கின்றோம்.

திருட்டுத்தனமான ஒப்பந்தங்களின் மூலம் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். இதுவே மொட்டின் கொள்கையாகும். நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். அப்படியென்றால் இந்த நாட்டை வீழ்த்தியவர்கள் யார்? மக்கள் வாழ்வை சீர்குலைத்துவிட்டு அதில் இருந்தா மேழெழுந்து வர முயற்சிக்கின்றீர்கள்? இந்த அரசாங்கத்திற்கு மனிதாபிமானம் உள்ளதா? மக்களின் துன்பங்கள் தெரியாதா என்றார்.

## விலையைக் கூட்டினாலும் நட்டமே மிஞ்சுகிறது

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் அரசாங்கம் தொடர்ந்து நட்டமடைந்தே வருவதாகத் தெரிவிக்கும் மின்சாரத்துறை இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக, ஒரு லீற்றர் டீசலால் அரசாங்கத்துக்கு 12 ரூபாய் நட்டம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகேவின் வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளன. இதனால் உள்நாட்டில் எரிபொருளின் விலையை குறைக்க முடியாது. டீசலால் மாத்திரம் 12 ரூபாயும், மண்ணெண்ணெய்யால் 22 ரூபாயும் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுகிறது. உலக சந்தையில் எரிபொருளின் விலைக் குறையும்போது உள்நாட்டிலும் விலைகளைக் குறைப்போம். எரிபொருளின் விலை சூத்திரத்துக்கு அமையவே எரிபொருளின் விலை தீர்மானிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தம்பிலுவில் மாணவனின் மரணத்துக்கு

# பாடசாலை நிர்வாக சீர்கேடே காரணம்

## நீதிகோரி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

திருக்கோவில் எஸ். கார்த்திகேசு

அம்பாறை, திருக்கோவில் வலயக் கல்வி அலுவலக பிரிவுக்கு உட்பட்ட தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (08) இரண்டு மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில், தரம் 08இல் கல்வி கற்கும் மாணவன் சிவபாலன் கிஷான் உயிரிழந்தமைக்கு பாடசாலை நிர்வாக சீர்கேடே காரணம் எனத் தெரிவித்து, நீதிகோரி பாடசாலை மாணவர்களின் பெற்றோர் நேற்று (09) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




இந்த ஆர்ப்பாட்டம் குறித்து பெற்றோர்கள் கருத்துத் தெரிவிக்கையில், இப்பாடசாலையில் போதைப்பொருள் பாவனை, ஆசிரியர்களின் பாலியல் சேட்டைகள், பாடசாலையில் நிர்வாக சீர்கேடுகள் போன்றவற்றைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், 'பாலியல் சீண்டல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி கிடைக்குமா', 'வெளியில் மதுபானம் விற்பவர் பாடசாலையில் சிற்றுண்டி விற்பதற்கு அனுமதி கொடுத்தது முறையோ', 'பாடசாலையின் நிர்வாக சீர்கேடே மாணவனின் உயிர்ப் பலிக்கு காரணம்', 'குடும்ப நிர்வாகமே வெளியேறு' போன்ற பதாகைகளைத் தாங்கி இருந்ததுடன் "மாணவர்களை பாலியல் துஷ்பிரயோம் செய்த ஆசிரியர் , முறையாக கல்வி கற்றுக் கொடுக்காது மாணவர்களின் கல்வியை சீரழித்து, மாதச் சம்பளம் என்ற பெயரில் அரசின் பணத்தை அழிக்கும் ஆசிரியர்களை உடனடியாக பாடசாலையில் இருந்து வெளியேற்று" என்றும் கோசம் எழுப்பினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த திருக்கோவில் வலயக் கல்வி பணிப்பாளர் வை. ஜெயச்சந்திரன், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வி கமலராஜன் ஆகியோரிடம் கல்வி அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்குமாறு, ஆர்பாட்டகாரர்களால் மகஜர்களும் கையளிக்கப்பட்டன.

# பாலிநகர் கிராமவாசிகளுக்கு காணி உரித்து ஆவணங்கள்

## மாந்தை கிழக்கு பிரதேச செயலகமும் மாகாண காணித் திணைக்களமும் இணைந்து முன்னெடுப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, பாலிநகர் கிராமத்தில் நீண்டகாலமாக வசித்து வரும் 78 வரையான குடும்பங்களுக்கு காணி உரித்து ஆவணங்களை வழங்கவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரட்ணம் தெரிவித்துள்ளார்.



மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாலிநகர் கிராமத்தில், அரச காணிகளில் வசித்து வரும் மக்களுக்கான காணி உரித்து ஆவணங்களை வழங்கும் வகையிலான நடமாடும் சேவை, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரட்ணம் தலைமையில் மாகாண காணித் திணைக்களத்தால் நடத்தப்பட்டது.

பாலிநகர் கிராமத்தில், 1990ஆம் ஆண்டு முதல் குடியிருந்து வரும் மக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கப்படாத நிலையில், குறித்த காணிகளுக்கான ஆவணங்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த காணிகள் தொடர்பிலான நடமாடும் சேவையை மேற்கொண்டு, காணி உரித்து ஆவணங்களை வழங்குவதற்கான ஆரம்பக்கட்ட காணி விசாரணைகள், மாகாண காணித் திணைக்களத்தால், பிரதேச செயலாளர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு உள்ளதுடன், பாலிநகர் கிராமத்தில் நீண்டகாலமாக வசித்து வரும் 78 வரையான குடும்பங்களுக்கு, காணி உரித்து ஆவணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி றஞ்சனா நவரட்ணம் தெரிவித்தார்.





## ஊடக ஆர்வலர்களுக்கான ஆலோசனையும் கௌரவிப்பும்

எழுத்தாணி கலைப் பேரவையின் நெறிப்படுத்தலில் தலைவர் வ. ராஜ்குமார் தலைமையில் திருகோணமலை நகர சபை பொதுநூலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (07) நடைபெற்ற நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கான சீருடை வழங்கப்பட்டதுடன் எதிர்கால சேவை முன்னெடுப்பு தொடர்பான ஆலோசனையும் வழங்கப்பட்டது.

மூத்த ஊடகவியலாளர் கலாபூசணம் வே. தங்கராசாவின் சேவைநலன் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் வளவாளராக அரசியல் ஆய்வாளர் ஆ. யதீந்திரா பங்கேற்று ஊடகத்துறையின் நிலைபேறு, ஆளுமை நிறைந்த செயற்பாடு, ஊடகவியலாளர்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

அ. அச்சுதன்







## மூதூர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்

அபு அலா

மத்திய சுகாதார அமைச்சால், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற அம்புலன்ஸ் வண்டியை, மூதூர் தள வைத்தியசாலைக்கு கையளிக்கும் நிகழ்வு, நேற்று (09) திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் வி. பிரமானந் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே முரளிதரன் கலந்துகொண்டு, அம்புலன்ஸ் வண்டியை, மூதூர் தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் வி. கயல்விழியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜீ. எம் கொஸ்த்தா உள்ளிட்ட வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

## யாழ்ப்பாணம் கொழும்பு பஸ்களுக்கு முகமாலையில் பரிசோதனை

### புளியங்குளத்தில் 20 நிமிடங்கள் ஓய்வு

என். ராஜ்

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களின் வழித்தட அனுமதி, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன வெள்ளிக்கிழமை (11) முதல் முகமாலையில் பரிசோதிக்கப்பட உள்ளதாக, வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் உறுப்பினரும் வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான சி. சிவபரன் தெரிவித்தார்.



வடமாகாண உள்ளூராட்சி அமைச்சில் நேற்று (09) நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போது, கொழும்பு - யாழ்ப்பாணம் இரவு சேவையில் ஈடுபடும் பஸ்களின் வழித்தட அனுமதி, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன முகமாலையில் பரிசோதிக்கப்படும் எனவும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் அனைத்து பஸ்களும் புளியங்குளப் பகுதியில் 20 நிமிடங்கள் நிறுத்தி வைத்து மீண்டும் பயணிக்க அனுமதிக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் பொலிஸார் மற்றும் வடக்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகள் ஆகியோரால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சி. சிவபரன் தெரிவித்தார்.



## புதுக்குடியிருப்பில் இலவச கணினி பயிற்சி



செ. கீதாஞ்சன்

தாய்த்தமிழ் பேரவையின் ஆதரவோடு நேசக்கரங்கள்- கனடா தலைமை அமைப்பின் ஒழுங்கமைப்பில் நேசக்கரங்கள் அமைப்பின் நிதிப்பங்களிப்பில் இளைஞர் யுவதிகளுக்கான இலவச கணினி பயிற்சி புதுக்குடியிருப்பில் திங்கட்கிழமை (07) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவிலின் பிரதம குருக்களின் ஆசியுரையோடும் நேசக்கரங்கள் அமைப்பின் நிறுவுநர்களில் ஒருவரான கனடாவில் வசிக்கும் இ. கெங்காதரனின் ஒலி வடிவிலான வாழ்த்துச் செய்தியோடும் தாய்த்தமிழ் மகளிர் பேரவையின் செயற்பாட்டாளர் திருமதி நீ. சுதர்சினியின் வரவேற்புரையுடன் நிகழ்வு தொடக்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், இணைபிரதம விருந்தினர்களாக நேசக்கரங்கள் அமைப்பின் ஆலோசகர் கலாநிதி நவரெத்தினம் உலகநாதர் (ஓய்வுநிலை பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்), தாய்த்தமிழ் பேரவையின் ஆலோசகர் மி.யே றெஜினோல்ட் (பிரதி ஆணையாளர், மாகாண இறைவரி திணைக்களம்), சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி. ஜெயகாந்த், சட்டத்தரணி வீ.எஸ்.எஸ் தனஞ்சயன், தாய்த்தமிழ் பேரவையின் தலைவர் சி. நாகேந்திரராசா, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆ.டீ. சு கேரத், தாய்த்தமிழ் பேரவையின் ஒருங்கிணைப்பாளரும் புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் தலைவருமான த. நவநீதன், தாய்த்தமிழ் மகளிர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் விதுர்ஷனா, அறக்கட்டளையின் ஸ்தாபகர் த. விஜயகலா, தாய்த்தமிழ் மகளிர் பேரவையின் முல்லை மாவட்ட தலைவி திருமதி ப. குணசிவா, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் பிரதி தவிசாளர் க. ஜெனமேஜயந், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினரும் நேசக்கரங்கள் அமைப்பின் செயற்பாட்டாளருமான சி. குகநேசன், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் யோ. மனோதாஸ், புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவையாளர் பு. கஜயகோகுலன், வேணாவில் பாடசாலையின் அதிபர் மோகனஜீவன், ஆகியோர் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி கணினி பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்கள்.



## காத்தான்குடியில் வீதிக்கு வந்த தோணிகள்

எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடியில் வாவி பெருக்கெடுத்ததால் வாவியோரம் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடி தோணிகள், வீதிக்கு கொண்டு வரப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

சீரற்ற வானிலை நிலவிவருவதால், காத்தான்குடி முதலாம் குறிச்சி, இரண்டாம் குறிச்சி ஆகிய பகுதியிலுள்ள வாவி பெருக்கெடுத்துள்ளதால் வாவிக் கரையோரம் தோணிகளை நிறுத்தமுடியாமல், வீதியில் நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் சுமார் 75க்கு மேற்பட்ட தோணிகள் வீதியில் நிறுத்தப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு முகத்துவாரம் முழுமையாக வெட்டப்பட்டு, நீர் ஓடுமாக இருந்தால் வாவிபெருக்கெடுக்காது எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

## சிவசிதம்பரத்தின் 30ஆவது ஆண்டு நினைவு தினம்



க. அகரன்

வன்னி தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரத்தின் நினைவு தினம் நேற்று (09) வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபியில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ. சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழரசு கட்சியின் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் ந. கருணாநிதி, பிரதேச சபை உறுப்பினர் சந்திரசேகரம், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல் கட்சியின் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலையிட்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

## மாட்டுத் திருடனுக்கு திண்டாட்டம்

செந்தூரன் பிரதீபன்

கிராமப் புறங்களில் மாடுகள், ஆடுகளைத் திருடி வந்த நபர் கைதுசெய்யப்பட்டு உள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

தெல்லிப்பளை, வறுத்தளைவிளான் பகுதியில் மாடு ஒன்றுடன் மூவர் நடந்து சென்றுள்ளனர். அவர்கள் மீது சந்தேகம் கொண்ட பொதுமக்கள், விசாரிக்க முற்பட்ட பொழுது, ஓடியுள்ளனர். அதில் ஒருவர் துரத்தப் பிடிக்கப்பட்டார். அவரை முறைகக் கவனித்த ஊர் மக்கள், பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கல்முனை சவளக்கடை

# கிட்டங்கி பாலத்தை குறுக்கறுத்து வெள்ளம் பெருக்கெடுப்பு



ஏ.எல்.எம் ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் அடை மழை காரணமாக, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கல்முனை - சவளக்கடை ஊடான கிட்டங்கி பாலத்துக்கு மேலால் வெள்ளநீர் பெருக்கெடுக்க ஆரம்பித்துள்ளதால், பொதுமக்களின் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மத்திய முகாம், சவளக்கடை, நாவிதன்வெளி, அன்னமலை, சொறிக்கல்முனை போன்ற பிரதேச மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் தொடர்ந்து மழை பெய்தால் பாலம் ஊடான போக்குவரத்து தடைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.





உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு

# “நாம் தயார்”

எஸ்.கே. குமார்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவே உள்ளதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு செப்டெம்பர் 20 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சட்டரீதியான அதிகாரங்கள் இருக்கின்றன என்றார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில், அண்மையில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான




விழிப்புணர்வு செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் எதிர்வரும் 2023 மார்ச் 20ஆம் திகதியுடன் முடிவடையும் எனவும், அதில் ஒரு வருட கால நீடிப்பும் உள்ளடங்குவதாகவும் சுட்டிக்காட்டிய தவிசாளர், தேர்தல் இருந்தால் முறையாக தேர்தலை நடத்துவதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும். அதில், சட்ட சிக்கல்கள் எவையும் இல்லை என்றார்.

உள்ளூராட்சி மன்றங்களில் இதற்கு முன்னர் 4,917 உறுப்பினர்களாக இருந்த போதிலும் தற்போதைய முறையில் 8,911 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அந்த எண்ணிக்கையை குறைப்பதற்கும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றார்.

# சமேதரர்களிடம் கைவரிசை

நடராஜா மலர்வேந்தன்

பசறை, கோணக்கலை மேற்பிரிவு தோட்டத்தில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் வள்ளி, தெய்வானை சமேதராய் எழுந்தருளியிருக்கும் முருகன் சிலைக்கு அணியப்பட்டிருந்த தங்கநகைகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

ஆலய பூசகரின் மகன் செவ்வாய்க்கிழமை (08) மாலை பூசை ஏற்பாடு செய்வதற்காக சென்றவேளையில் ஆலய கதவுகள் திறக்கப்பட்டிருப்பதை கண்டு தனது தந்தையான பூசகருக்கு அறிவித்துள்ளார்.

பூசகர் ஆலயத்துக்குச் சென்று பார்த்தபோது, சுவாமிகளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இதுதொடர்பில், ஆலய நிர்வாக சபையினரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. பின்னர், பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சட்டவிரோத கூடாரங்கள் நிர்மாணித்தமைக்கு எதிர்ப்பு

ரஞ்சித் ராஜபக்‌ஷ

நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர், சட்டவிரோதமான முறையில் கடைகளை நிர்மாணிப்பதற்காக சட்டவிரோதமான முறையில் கூடாரங்களை அமைத்தமைக்கு அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

அந்த உறுப்பினரால், திங்கட்கிழமை (07) இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கடைகளை நிர்மாணிப்பதற்காக, தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுக்கு செவ்வாய்க்கிழமை (08) கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

ஹட்டன்- பொகவந்தலாவை பிரதான வீதியில் டின்சின் நகருக்கு அண்மையிலேயே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டன என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

பெருந்தோட்டத்துக்குச் சொந்தமான காணிகளை வெளியார் ஆக்கிரமிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தச் சட்டவிரோதமான கூடாரங்களை அப்புறப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின், தாங்களும் அவ்விடத்தில் இடங்களைப் பிடித்து, கூடாரங்களை அமைப்போமென ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.



# ‘குப்பை நகரம்’

சுதத் எச்.எம்.ஹேவா



ஹட்டன்- டிக்கோயா நகர சபையால் நிர்வகிக்கப்படும் ஹட்டன் நகரம் குப்பை கூழங்களால் நிரம்பிவழியும் நகரமாகியுள்ளது என அகில இலங்கை முற்போக்கு தொழிலாளர் முன்னணியின் தலைவர் பேராசிரியர் பீ. இளங்கோ தெரிவித்துள்ளார்.

ஹட்டன் நகரை பொறுத்தவரையில் மூவினங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். தற்போதைய நிலைமையை அவதானிக்கும் போது, ஹட்டன் நகரத்தை சாதாரண நகரமாக இனங்காண முடியாது என்றார்.

ஹட்டனில் உள்ள அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர்,

பிரதான பஸ் நிலையத்துக்குச் சென்றால் துர்நாற்றம் வீசுகின்றது. நீதிமன்றத்துக்குச் செல்லும் வீதிகளின் இரு மருங்குகளிலும் குப்பைகள் நிரம்பிக் கிடக்கின்றன.



தொழிலாளர் காரியாலயத்துக்கு முன்பாகவும் குப்பைகள் நிரம்பியிருக்கின்றன. துர்நாற்றமும் வீசுகின்றது. இவ்வாறு ஆங்காங்கே குப்பைகள் குவிந்து கிடப்பதால் நுளம்புகள் இலகுவில் பெருக்கும். இதனால், டெங்கு உள்ளிட்ட நோய்கள் விரைவில் பரவும் என்றும் அவர் எச்சரித்தார்.

# ஞாயிறன்று கௌரவிப்பு

ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸலாவை பிரதேசத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற வானிலையால், ஒத்திவைக்கப்பட்ட கௌரவிப்பு நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெறும் என மணிவேல் சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

சர்வதேச விளையாட்டு வீரர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 50க்கு மேற்பட்டோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

உடப்புஸ்ஸலாவை எமஸ்ட் ஜெட்லைன்



விளையாட்டு மைதானத்தில் இந்நிகழ்வு பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது என நிகழ்வு ஏற்பாட்டாளரும், தேசிய, சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கைக்கு பதக்கங்களை வென்று கொடுத்த மணிவேல் சத்தியசீலன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வினையொட்டி நவம்பர் 11, 12, 13ஆம் திகதிகளில் கரப்பந்தாட்ட சுற்று போட்டியும் எமஸ்ட் தோட்ட ஜெட்லைன் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# கஞ்சா புகைத்த இளைஞன் கைது

ஆ.ரமேஸ்.

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரபல பாடசாலையின் நுழைவாயிலுக்கு அருகில் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞனை செவ்வாய்க்கிழமை (08) மாலை இராகலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவ்விடத்திலேயே நின்றுகொண்டு பல நாள்களாக கஞ்சா புகைப்பதை அவதானித்த பொதுமக்கள், இராகலை பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டுவந்ததை அடுத்து, சிவில் உடையில் சென்றிருந்த பொலிஸார் அவ்விளைஞனை கைது செய்தனர். அவரிடமிருந்து கஞ்சாவை மீட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார், அவரை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# வழிதவறிச் செல்லும் நாய்கள்

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகருக்குள் வழிதவறிச் செல்லும் நாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கு கொண்டே செல்வதால், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட மக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

நகருக்குள் மிகவும் இலகுவாக வழித்தவறிச் செல்லும் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றனர்.

அவ்வாறு வழிதவறிச் செல்லும் நாய்கள் மற்றும் நாய்க்குட்டிகள் சில பாடசாலைகளுக்கு உள்ளேயும், வீதிகளிலும் அலைந்துதிரியும் இவ்வாறான நாய்கள் தங்களையும் பாடசாலைகளுக்குச் செல்லும் தங்களுடைய பிள்ளைகளையும் கடித்துவிடுமோ என்ற பேரச்சமும் ஏற்பட்டுள்ளது என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

# சிவனடியார்கள் செய்யக்கூடாதவை

சி.டி.பெருமாள்

2022 டிசெம்பர் மாதம் ஏழாம் திகதி பௌர்ணமி தினத்துடன் சிவனடி பாதமலை பருவகாலம் ஆரம்பமாக உள்ளது.

2022/2023 க்கான சிவனொளி பாதமலை பருவகால யாத்திரை ஆரம்பமாவதையொட்டி நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட தலைமையில் நல்லத்தண்ணி நகரில் உள்ள பௌத்த மண்டபத்தில் நவம்பர் (08) கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் சிவனொளி பாதமலைக்கு பொறுப்பான பீடாதிபதி பெங்கமு தம்மதின்ன தேரர் கலந்து கொண்டு யாத்திரிகர்கள் நலன் பற்றி விவரமாக கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஹட்டன் அரச பஸ் நிலைய அதிகாரி, தனியார் பஸ் நிலைய அதிகாரி, ஹட்டன் ரயில் நிலைய அதிகாரி, மின்சார சபை அதிகாரி, தேசிய நீர்வளத்துறை அதிகாரி, வனத்துறை அதிகாரி, விலை கட்டுப்பாட்டு அதிகாரி, வைத்திய அதிகாரி, பொது சுகாதார அதிகாரி, மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோருடன் ஹட்டன், கினிகத்ஹேன, நோர்வூட், பொகவந்தலாவ,நோட்டன், மஸ்கெலியா, நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய அதிகாரிகள் மவுசாகல பகுதியில் உள்ள இராணுவ அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மவுஸ்சாகலை சந்திமுதல் சிவனொளி பாதமலை உச்சி வரையிலும் வியாபாரத்தில் ஈடுபடும், வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

### விலையை நிர்ணயிக்கவும்

நிகழ்வில் யாத்திரிகர்கள் நலன் கருதி, முறையான பஸ் சேவை, தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் சகல பொருட்களும் விலை கட்டுப்பாட்டுக்கு அமைய விற்பனை செய்வதை உறுதி செய்ய வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

### தடுக்க வேண்டும்

மேலும் பாதுகாப்பு அதிகாரிகள் பாதுகாப்பு உறுதி செய்யும் பணியில் ஈடுபட்டு வருவர் எனவும் நீர்த்தேக்க பகுதியில் அதிகளவில் நீர் வரத்து உள்ளது. இதனால் அப்பகுதியில் நீராடச் செல்வதை தடுக்க இராணுவத்தினர், அதிரடி படையினர் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

### தடைசெய்ய வேண்டும்

பிளாஸ்டிக் மற்றும் வெற்றுப் போத்தல்கள் பொலித்தீன் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது என வனவள பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### போதைக்கு தடை

போதைப்பொருள் பாவனையைத் தடுக்க இராணுவத்தினர், அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து செயற்பட உள்ளனர்.

### வீதித் தடை

தியகல, நோட்டன், மவுஸ்சாகலை, ஹட்டன் மல்லிப்பூ சந்தி ஆகிய நான்கு இடங்களில் வீதி தடை செய்யப்பட்டு வாகனங்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### இலவசம்

தங்கு தடை இன்றி மின்சாரம் வழங்க மின்சார சபை உறுதி செய்துள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகால் திணைக்களம், சுத்தமான குடிநீர் வழங்கும் பணியை மலை உச்சியில் இருந்து அடிவாரம் வரை குடிநீர் குழாய் பொருத்தி இலவசமாக வழங்கவுள்ளது. சுத்தமான உணவு பொருட்கள் மற்றும் உணவகங்கள் மூலம் வழங்க பொதுச் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர்.

### வீதி விளக்கம்

வீதி அபிவிருத்தி அதிகார சபை முன் வந்து, ஹட்டன் முதல் நல்லத்தண்ணி வரை, தியகல - நோட்டன் வீதி அபிவிருத்தி செய்தல் மற்றும் ஒரு வழி பாதையாக அமைத்தல்; ஹட்டன் - நல்லத்தண்ணி - மஸ்கெலியா வழி பிரதான பாதையாக அமைத்தல் என உறுதி செய்யப்பட்டது.

### வாகனங்கள் நிறுத்த தடை

நல்லத்தண்ணி வீதியில், வாகனங்கள் இருபுறங்களும் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### கழிவறைகள்

கழிவறைகளை இம்முறை குத்தகைக்கு எடுப்பவர் யாத்திரிகளின் நலன் கருதி முறையான அனுமதி சீட்டு வழங்க வேண்டும். அதிகளவில் பணம் அறவிட கூடாது.

### மரங்களை தறிக்கக்கூடாது

வன பகுதியில் மரங்கள் தறிக்க கூடாது என வன பாதுகாப்பு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். குறிப்பாக தற்காலிக வர்த்தக நிலையங்கள் அமைக்க இவ்வாறு சட்ட விரோதமாக மரங்கள் தறிக்க வாய்ப்பு உண்டு என அவர்கள் கூறினர்.

# ஜீவனுக்கு பிறந்தநாள்

ஆ.ரமேஸ்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தனது 28 ஆவது பிறந்தநாளை நேற்று (09) வெகு விமர்சையாக கொண்டாடினார்.

கண்டி, கொட்டுகொடல ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் ஆசீர்வாத பூசைகள் இடம்பெற்றன. தலதா மாளிகையிலும் விசேட வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

அத்துடன், கண்டி - பேராதனை வீதியில் அமைந்துள்ள ‘தயா’ சிறுவர் காப்பகத்தில் பராமரிக்கப்படும் சிறார்களுடன் கேக் வெட்டினார்.

இந்த நிகழ்வுகளில் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், உபதலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

அங்கிருந்து, இறம்பொடை வேவண்டன் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு வருகை தந்து, பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டார். பின்னர், கொட்டக்கலை சி.எல்.எப் காரியாலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பிறந்த நாள் நிகழ்வில் காங்கிரஸ் குடும்பத்தாருடன் கலந்துகொண்டார்.






# சாரியை மாற்றுவதைவிட சிந்தனையை மாற்றுவதே சிறந்தது

பொருளாதார நெருக்கடி காரணமாக, சாரிகளைக் கொள்வனவு செய்வதில் ஆசிரியைகள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதால், சாரி அல்லாத உகந்த ஆடைகளைப் பரிந்துரை செய்யுமாறு கல்வியமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

பெரும்பாலான ஆசிரியைகள், மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துகின்றனர். அதில் பயணிக்கும் போது, சாரி பெரும் இடைஞ்சலாக இருப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது. அவை பொதுவெளியில் பேசும் பொருளாகிவிட்டன.

ஆசிரியைகள் அணியும் சாரி, ஒசரியை மாற்றுவதற்கான எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லையென கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார். ஆகையால், எவ்வளவுதான் சிரமங்களுக்கு முகங்கொடுத்தாலும் இருக்கும் சாரிகளையே அணியவேண்டும்.

ஒரு சிலர் ஆசிரியர்களை கேலி, கிண்டல் செய்வர். எனினும், ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான முழுப் பங்கும் ஆசிரியர்களைச் சேர்ந்ததாகும். மாதா, பிதா, குரு தெய்வம் என்பர். அதனால்தான், ஒரு தேசத்தின் எதிர்காலம் ஆசிரியரின் தோள்களில் தங்கியுள்ளது.

ஆசிரியர், ஆசிரியை ஆகியோர் ஓர் உன்னத மனிதர்கள். கடந்தகால ஆசான்களை கண்டவுடன், மனதில் ஒருவகையான பயபக்தி ஏற்படும், ஒரடி தூரத்திலிருந்தே, பணிவுடன் உரையாடும் நிலைமை உள்ளது.

கற்பித்தல், கண்டிப்பு, அன்பு, பாசம், எல்லாவற்றையும் கலந்து கல்வியோடு புகட்டிவிடுவர். தவறுகளுக்காக நியாயமாகத் தண்டிக்கப்பட்டால், ஆசிரியர்களின் தண்டனையை ஆமோதித்து, பெற்றோர்களும் தண்டிப்பர். அந்தகாலம் மலையேறிவிட்டது.

தற்போது கடமையிலிருக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களுக்கும் அவ்வாறான மரியாதை கிடைக்கிறது. ஒரு சிலரின் செயற்பாடுகள் அவமரியாதையானவை. பண்டாரகம, ஹுங்கமுவ கனிஷ்ட வித்தியாலயத்தில் 5 ஆம் தரத்தில் கல்விபயிலும் மூன்று மாணவர்களுக்கு, பொலிஸாரால் மின்சாரம் பாய்ச்சி தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துக்கு உடந்தையான அதிபரும் இரண்டு பொலிஸாரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடமையில் இருந்து அதிபர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். பாடசாலைக்குள் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையை, பொலிஸ் வரைக்கும் கொண்டு சென்றமை தவறானது. பொலிஸார் வழங்கிய தண்டனையும் ஆபத்தானது.

இதற்கிடையே, பாடசாலை மாணவர்கள் இணைந்து மண்ணைப் பிசைந்து, வகுப்பறையை நிர்மாணித்துக்கொண்ட சம்பவமொன்று தெனியாயவில் இடம்பெற்றுள்ளது. அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இவ்வாறு மாணவர்களும் ஆசிரியர்களும், பல முயற்சிகளை செய்திருக்கின்றனர்.

மனித உரிமைகளை மீறாத வகையில் தண்டிக்கப்பட்டால், எவருக்குமே பிரச்சினையில்லை. எனினும், 'நெருக்கடி' சகலருக்கும் பொதுவானது. ஆக, அதிலிருந்து மீளஎழுவதற்கு, பல ஆசிரியர்களின் சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இடைவிலகல்கள் அதிகரிப்பதற்கும் ஆசான்கள் காரணகர்த்தாக்களாக இருந்துவிடக்கூடாது.

ஒட்டுமொத்த சமுதாயமும் குருவை வணங்குகிறது என்பதை நினைவில் கொண்டு, சாரியை மாற்றுவதை விட, சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தி, சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்பதே சிறந்தது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள் www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்



ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர்.

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை, உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்கு புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்கு பிரதானமானவை.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ரணிலின் பிரித்தாளும் அரசியலை

# தாண்டுமா தமிழ்க் கட்சிகள்



புருஜோத்தமன் தங்கமயில்

இரண்டாயிரங்களின் ஆரம்பத்தில் ஆயுதப்போர் முனையில் வெற்றி முகத்தோடு இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளை, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வந்து, ஆழ ஊடுருவி அழிப்பதற்கான விதைகளைப் போட்டவர் ரணில் விக்கிரமசிங்க.

'கருணா அம்மான்' என்கிற புலிகளின் கிழக்கு தளபதியை பிரித்தெடுத்து, இராணுவ பலத்தை சிதைத்ததுடன், சர்வதேச ரீதியில் புலிகளுக்கு எதிரான தடைகளை வெற்றிகரமாக நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான வேலைகளையும் செய்திருந்தார். புலிகளை இராணுவ மற்றும் இராஜதந்திர ரீதியில் தோற்கடிப்பதற்காக ரணில் போட்ட பாதையில்தான், அவருக்குப் பின்னர் வந்த ராஜபக்ஷர்கள் பயணித்து 2009இல் வென்றார்கள்.

ரணில் தனக்கு கிடைக்கும் வாய்ப்புகளை எல்லாம், எப்படிக் கையாள்வது என்பதில் கவனமாக இருப்பவர். அதற்காக தயவுதாட்சண்யங்கள் இன்றி, அரசியல் சதுரங்கத்தை ஆடுபவர். பொதுவாகவே, ஆட்சி அதிகாரங்களைக் குறிவைக்கும் அரசியல்வாதிகள், காரியம் நடக்க வேண்டுமென்றால் யார் கால்களை வேண்டுமானாலும் பிடிப்பார்கள். அதுபோல, கணநேரத்தில் குப்புறத் தள்ளி, முதுகில் குத்தவும் தயங்க மாட்டார்கள்.

ஆனால், ரணில் சற்று வேறுபாடானவர். அதிக நேரங்களில் தோளில் கைபோட்டு, நட்போடு அணுகியே, எதிரிகளை வீழ்த்துபவர். அதனால்தான் அவரை 'பசுந்தோல் போர்த்திய புலி' என்பார்கள்.

ராஜபக்ஷர்களுக்கு எதிராக நாடே வீதிக்கு இறங்கிப் போராடிபோது, ஒரு கட்டம் வரையில், போராட்டங்களை ரணில் ஆதரித்து வந்தார். ராஜபக்ஷர்களிடம் இருந்து அதிகாரத்தை அவர் பெற்ற புள்ளியில் இருந்து, போராட்டங்களை மட்டுமல்ல, அவருக்கு எதிரான அரசியல் சக்திகளையும் அழிப்பதற்கான வாய்ப்புகளை, ஒவ்வொன்றாகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்.

ராஜபக்ஷர்களில் தனக்கு அச்சுறுத்தலான பசில் ராஜபக்ஷ தொடங்கி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஈறாக, தன்னுடைய அரசியல் எதிரிகளை ரணில் குறிவைத்து பந்தாடத் தொடங்கியிருக்கிறார். அவரின் எதிரிகள் பட்டியலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றது.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ராஜபக்ஷர்களை எப்படியாவது வீழ்த்தியாக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் எல்லாமும் ஓரணியில் இணைந்தார்கள். அப்போது, ரணிலுக்குப் பதிலாக மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக முன்னிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், அந்த முடிவுக்கு ரணில் ஆரம்பத்தில் இணங்கவில்லை. ஆனால், அவரின் முடிவை மாற்றியது இரா. சம்பந்தனும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலமும்தான். "...நீங்கள் ஜனாதிபதி வேட்பாளரானால் ராஜபக்ஷர்கள் இலகுவாக வென்றுவிடுவார்கள். ஆகவே, ராஜபக்ஷர்களோடு இருந்த மைத்திரியை பொதுவேட்பாளராக்கினால் தென் இலங்கை கிராமங்களின் வாக்குகளைக் கவர்வது இலகுவானது. அது வெற்றிக்கு முக்கியமானது. அப்படியான நிலையில், நீங்கள் போட்டியிடுவது சாத்தியமில்லாதது..." என்று ரணிலை விலக வைத்தவர் சம்பந்தன்.

அப்போது சந்திரிகா குமாரதுங்கவும் மங்கள சமரவீரவும், ரணிலை சமரசப்படுத்துவதற்காக சம்பந்தனையும் கூட்டமைப்பின் பலத்தையும் நம்பியிருந்தார்கள். ஆனால், கூட்டமைப்பு தனக்குள் பிளவுட்டு, பலமிழந்த புள்ளியில் இன்று நிற்கும்போது, இன்னும் இன்னும் பலவீனப்படுத்தும் வேலைகளைச் செய்வதில் ரணில் கவனமாக இருக்கிறார்.

ஏனெனில், ராஜபக்ஷர்களுக்கு எதிராக வீதியில் இறங்கி போராடிய மக்களின் கோரிக்கைகளுக்கு எதிராக, குறிப்பாக மக்கள் ஆணைக்கு எதிராக, ஜனநாயக படுகொலை செய்துகொண்டு, ரணில் ஆட்சிபீடம் ஏறினார் என்பது கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாக இருந்தது. அது, பாராளுமன்றத்துக்குள் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவு வாக்கெடுப்பின் போதும் தாக்கம் செலுத்தும் சூழ்நிலை உருவானது. அதனால்தான், கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் அவசரம் அவருக்கு ஏற்பட்டது.

டளஸ் அழகப்பெருமவை ஆதரிப்பது என்று கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்த போதிலும், அந்த முடிவுக்கு எதிராக குறைந்தது ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்து இருக்கிறார்கள். அதனை, ரணிலே கூட்டமைப்புடனான சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். இன்றைக்கு கூட்டமைப்புக்குள் பிளவு மேலும் அதிகரித்திருப்பதற்கு ரணில், தன்னுடைய கரங்களை நீட்டிக் கொண்டிருப்பது காரணமாகும்.

தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தின் மீதான அதிருப்தியை, தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலின் போது கணிசமாக வெளிப்படுத்தினார்கள். அதனால், கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு, வீட்டுச் சின்னத்தின் மீதான தங்கியிருந்தல் தொடர்பிலான அணுகுமுறை குறிப்பிட்டளவு மாறிவிட்டது.

கூட்டமைப்புக்கு மாற்றாக குறிப்பாக, தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தங்கியிருப்பதற்கு மாற்றாக, பொதுக் கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பில் அவர்கள் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தப் புள்ளியை ரணில் விக்கிரமசிங்க பிடித்துக் கொண்டிருக்கிறார். அதன் மூலம், தமிழ்த் தேசிய அரசியலில் இன்றளவும் முதன்மைக் கட்சியாக இருக்கும் கூட்டமைப்பை பிளவுபடுத்தி, தனக்கு சார்பான கட்டமைப்பொன்றை பேண முடியும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

சம்பந்தனும் எம்.ஏ சுமந்திரனும், ரணிலின் முடிவுகளை ஆதரித்த சமயங்களில் அவர், கூட்டமைப்பினை பிளவுபடுத்துவது சார்ந்து யோசித்ததில்லை. ஆனால், அவர்கள் இருவரும் தனக்கு எதிராகக் திரும்பி விட்டார்கள் என்ற நிலையில், கூட்டமைப்பின் பிளவு அவருக்கு அவசியமாகிவிட்டது.

அண்மையில், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களின் விடுவிப்புக்கு யார் யாரெல்லாம் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதைப் பார்த்தால், ரணிலின் கரங்கள் எங்கெல்லாம் நீண்டிருக்கின்ற என்பது புரியும். நீதிமன்றங்களில் ஆதாரங்களை வைத்து, வழக்குகளை நடத்த முடியாத நிலையில் பலரை, அரசியல் கைதிகளாக இலங்கை அரசு சிறைகளில் அடைத்து வைத்திருக்கின்றது. அவர்கள் பல்லாண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் விடுதலை என்பது எதற்காகவும் பிற்போடப்படக்கூடாது. அவர்களின் விடுதலை யாரால் நிகழ்ந்தாலும் அதனை தமிழ் மக்கள் ஏற்பார்கள். அதில் மாற்றுக்கருத்தில்லை.

அதாவது, 'யார் குற்றினாலும் அரசியானால் சரி' என்ற நிலை! ஆனால், அந்தக் கட்டங்களை, தமிழ் மக்களின் அரசியல் பலத்தைச் சிதைப்பதற்காகக் கொடுங்கரங்கள் கையாள முயன்றால், அதை அடையாளம் கண்டு கொள்வது தவிர்க்க முடியாதது.

நாட்டின் பொருளாதார பின்னடைவு என்பது கணிக்க முடியாத அளவுக்கு இருக்கின்றது. அப்படியான நிலையில் தென்இலங்கை, மீட்பர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றது. அதன் ஒருகட்டமாக, ரணில் புலம்பெயர் தமிழ் வர்த்தகர்களையும் அழைகின்றார். அதில், அவர் பணமுதலைகளை அடையாளம் கண்டு அழைக்கின்றார். அவர்களை நாட்டின் பொருளாதார மீட்சிக்காக மட்டுமல்லாது, தமிழ்த் தேசிய அரசியலைக் கையாளுவதற்கான கருவிகளாகவும் கையாள நினைக்கின்றார்.

ரணில் எப்போதுமே தன்னை மேன்மையானவர் என்ற தோரணையில் முன்னிறுத்துபவர். அதாவது, மேட்டுக்குடி மனநிலையோடு இயங்குபவர். தன் முன்னால் யாரும் பெரியவர் இல்லை என்பது அவரது நிலைப்பாடு. அப்படிப்பட்ட ரணில், அண்மைய பிரித்தானிய பயணத்தின் போது, புலம்பெயர் வர்த்தகர்கள், பணமுதலைகள் சிலரை சந்தித்து, பௌவியமாக உரையாடிய விடயம் கவனிப்புக்குரியது. அதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தையும் தன்னுடைய அரசியல் பலத்தையும் அதிகரித்துக் கொள்ள முடியும் என்பது அவரது நோக்கம்.

ஏற்கெனவே, தமிழ்த் தேசிய கட்சிகள் புலம்பெயர் பணமுதலைகளின் ஏவலாளிகள் போல இயங்குவதான நிலை இருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், தமிழ்த் தேசிய கட்சிகளைப் பிரித்தாண்டதில் புலம்பெயர் பணமுதலைகளின் பங்கு கணிசமானது. ஒரே கட்சிக்குள்ளேயே மற்ற வேட்பாளர்களைத் தோற்கடிப்பதற்காக, பெருமளவு பணத்தை இவ்வாறான பணமுதலைகள் செலவிட்டன.

அதற்காக, கட்சிகளும் அதன் தலைவர்களும்கூட எசமானின் காலடியைச் சுற்றிவரும் நன்றியுள்ள ஜீவன் மாதிரி இயங்கினார்கள். மக்களின் எதிர்பார்த்தை மீறி, இவ்வாறான பணமுதலைகளின் தேவைகளுக்காக குரைக்க ஆரம்பித்தார்கள். அதன் விளைவு தமிழ்த் தேசிய பரப்பில், சிங்கள இனவாதக் கட்சிகளினதும் துணைக்குழுக்களினதும் வெற்றி நிகழ்ந்தது.

இப்போதும் ரணிலின் பெரும் ஆசீர்வாதத்தோடு புலம்பெயர் பணமுதலைகள் சில, தமிழ்த் தேசிய கட்சிகளை குறிப்பாக கூட்டமைப்பை சிதைக்கும் வேலைகளில் கடந்த நாள்களில் இயங்குவது தெளிவாகத் தெரிகின்றது.

தங்களால் கையாள முடியாத தலைவர்களை அரங்கில் இருந்து அகற்றி, கையாட்களைக் கொண்டு தமிழ்த் தேசிய அரசியலை நிரப்புவதுதான் இவர்களின் இலக்கு. இவ்வாறான செயற்பாட்டுக்கு, தூரநோக்கற்ற அரசியல் தலைவர்களும் அமைப்புகளும் துணைபோகின்றன.

எப்போதுமே, எதிரியின் கையை வைத்தே எதிரியின் கண்களை குத்த வைக்கும் ரணிலின் தந்திரம், இப்போதும் தமிழ்த் தேசிய அரசியலை குறிவைத்திருக்கின்றது. அதனை அடையாளம் காண்பது என்பது, தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்புக்கு அவசியமானது. இல்லையென்றால், ஏவல் நாய்களால் மாத்திரம், தமிழ்த் தேசிய அரங்கு நிறையும்.

## கடிதங்கள்

அம்பிளாந்துறை – குருக்குகள்மடம்

### படகுப் பாதையை புனரமைக்குமாறு கோரிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்துக்கும் எழுவாங்கரைப் பிரதேசத்துக்கும் இடையிலான பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாக அமைவது, மட்டக்களப்பு வாவியை ஊடறுத்துச் செல்லும் அம்பிளாந்துறை - குருக்கள்மடம் ஓடத்துறைப் படகுப்பாதையாகும்.

இப்போக்குவரத்து மார்க்கத்தினூடாக விவசாயிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரச, மற்றும் தனியார் ஊழியர்கள், வியாபாரிகள், பொது மக்கள் எனப்பலரும் பயணம் செய்து வருகின்றனர். இப்படகுப் பாதை தற்போதைய நிலையில் மிகவும் பழுதடைந்த நிலையில் சேவையில் ஈடுபடுவதால், அதில் பயணம் செய்யும் மக்கள் மிகுந்த அச்சத்துடன் பயணிப்பதாக அங்கலாய்க்கின்றனர்.

இப்படகுப் பாதையின் பலகைகள் உடைந்து துவாரங்களுடன், துருப்பிடித்த நிலையில் காணப்படும் படகுப் பாதையை புனரமைத்து, நவீன முறைப்படுத்தி, பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு, உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு, இப்பாதையை பயன்படுத்தும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– வ. சக்தி




ஆந்திரா

# போராடிய 2 பெண்களையும் உயிருடன் புதைக்க முயற்சி

நிலத்துக்காகப் போராட்டம் நடத்திய இரு பெண்களை, மூவர் உயிருடன் புதைக்க முயன்ற சம்பவம், ஆந்திர மாநிலம், ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள ஹரிபுரம் கிராமத்திலேயே அரங்கேறியுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த தாலம்மா, சாவித்திரி ஆகியோருக்குச் சொந்தமான காணியை அதே கிராமத்தை சேர்ந்த ஆனந்தராவ், பிரகாஷ்ராவ், ராமராவ் ஆகிய மூன்று பேர் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தமது காணியைத் திரும்பத்தரக் கோரி, இரு பெண்களும் குறித்த காணியில் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த போது அங்கு வந்த ஆனந்தராவ், பிரகாஷ்ராவ், ராமராவ் ஆகிய மூவரும் டிராக்டர்களில் மண்ணை அள்ளி வந்து அவர்கள் மீது கொட்டி, உயிருடன் புதைத்துக் கொலை செய்ய முயன்றுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்நிலையில் அப்பகுதியில் இருந்த மக்கள் உடனடியாக மண்ணில் புதைக்கப்பட்ட இரண்டு பெண்களையும் போராடி மீட்டுள்ளனர்.

இந்நிலையில், தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த மூவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை

## கோவில்களில் அலைபேசி பாவனைக்குத் தடை

மதுரை மீனாட்சியம்மன் கோவிலை தொடர்ந்து திருச்செந்தூர் கோவிலிலும் அலைபேசிக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

பலர் அலைபேசியைப் பயன்படுத்தி அபிஷேகத்தை படம் பிடிக்கின்றனர். கோவில் சிலைகள் முன்பு செல்பி எடுக்கின்றனர். இவர்களின் செயலால் பக்தர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்ற மனு விசாரணையை அடுத்து, “கோவில்கள் சுற்றுலா தலங்கள் அல்ல. திருச்செந்தூர் கோவில் உள்ளே அலைபேசியை அர்ச்சகர் உட்பட யாரும் கொண்டு செல்ல அனுமதிக்க கூடாது. கோவில் வாசலில் அலைபேசி ‘டிடெக்டர்’ வைத்து பரிசோதிக்க வேண்டும்” என்று நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

கர்நாடகா

## ஆசிரியர் தெரிவு பரீட்சை அனுமதி அடையில் ‘ஆபாசம்’

ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டையில் நடிகை சன்னி லியோனியின் புகைப்படம் அச்சிடப்பட்ட சம்பவம் கர்நாடகாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடகாவைச் சேர்ந்த நபர் ஒருவர் அண்மையில் அரச பாடசாலை ஆசிரியருக்கான ஆட்சேர்ப்புத் தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தார்.


இந்நிலையில் அவருக்கு வந்த பரீட்சைக்கான அனுமதி அட்டையில் முன்னாள் ஆபாசப்பட நடிகை சன்னி லியோனியின் புகைப்படம் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த அனுமதி அட்டையை தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த பதிவானது இணையத்தில் வைரலானதைத் தொடர்ந்து பலரும் கர்நாடக பாரதிய ஜனதா அரசை விமர்சித்து வருகின்றனர்.



இது குறித்து, ‘சட்ட மன்றத்துக்குள் ஆபாசப்படம் பார்க்கும் கட்சியிடம் இருந்து வேறென்ன எதிர்பார்க்க முடியும்’ என எதிர்கட்சியான காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பி.எஸ் நாயுடு ட்விட்டரில் விமர்சித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


Application for Karnataka Teacher Eligibility Test
KARTET – 2022

சித்தூர்

## ஆசிரியருக்கு ஆத்திரமூட்டிய மாணவனின் கையெழுத்து

”கையெழுத்து நன்றாக இல்லை” எனக் கூறி மாணவனை ஆசிரியர் ஒருவர் கொடூரமாகத் தாக்கிய சம்பவம் சித்தூரில் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீ காளஹஸ்தி, சித்தூர் மாவட்டத்தில் இயங்கி வரும் தனியார் பாடசாலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் மீதே ஆங்கில பாட ஆசிரியர் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதில் காயமடைந்த மாணவன் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறான்.

மாணவன் மீது தாக்குதல் நடத்திய ஆசிரியரை பணி நீக்கம் செய்வதாக பாடசாலை நிர்வாகம் தெரிவித்தது.



மேலும் ஆசிரியர் தாக்கியதில் படுகாயம் அடைந்த மாணவனின் மருத்துவ செலவுகள் அனைத்தையும் பாடசாலை நிர்வாகமே ஏற்றுக்கொண்டு செலுத்துவதாகவும் பாடசாலை நிர்வாகத்தினர் உறுதி அளித்துள்ளனர்.

அமெரிக்கா

## ‘போர்ப்ஸ்’ பட்டியலில் 3 இந்திய பெண்கள்

அமெரிக்காவின் முன்னணி வர்த்தக இதழான ‘போர்ப்ஸ்’ அண்மையில் வெளியிட்டுள்ள ஆசியாவின் தலைசிறந்த 20 பெண்களில், இந்தியாவை சேர்ந்த மூன்று பெண்கள் இடம்பிடித்துள்ளனர்.

‘ஸ்டீல் அதாரிட்டி ஒப் இந்தியா’வின் தலைவர் சோமா மோன்டெல், ‘எம்கியூர் பார்மா’ நிறுவனத்தின் செயல் இயக்குநர் நமிதா தாபர், ‘ஹோநாசா நுகர்வோர்’ நிறுவனத்தின் இணை நிறுவநர் கசல் அலக் ஆகிய மூவரே இவ் இதழில் இடம்பிடித்துள்ளனர்.

கொரோனா தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கப்பல், மனை வணிகம், கட்டுமானம், மருந்து, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இப் பெண்கள் சிறப்பாக செயலாற்றி முன்னேற்றியுள்ளனர் எனவும் குறித்த இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, சீனா, தென் கொரியா, இந்தோனேசியா, ஜப்பான், சிங்கப்பூர், தென் கொரியா, தாய்வான், தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண்களும் இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.



இராஜஸ்தான்

## ‘கபடி’ காதலால் ஆணான பெண்

காதலியைக் கரம் பிடிக்க பெண்ணொருவர் ஆணாக மாறிய சம்பவம் இராஜஸ்தானில் இடம்பெற்றுள்ளது. மீரா குந்தல் என்ற பெண்ணே இவ்வாறு ஆணாக மாறியுள்ளார்.

அரச பாடசாலையில் கபடி பயிற்சியாளராக பணியாற்றி வரும் மீராவிடம் 2016ஆம் ஆண்டு முதல் கல்பனா என்பவர் பயிற்சி பெற்று வந்துள்ளார்.

இருவரும் நாளடைவில் ஒருவரை ஒருவர் காதலிக்க ஆரம்பித்துள்ளனர்.



இந்நிலையில் 2018ஆம் ஆண்டு மீரா தன்னை திருமணம் செய்துகொள்ளுமாறு கல்பனாவிடம் கேட்டுள்ளார். இதற்கு கல்பனாவும் சம்மதித்துள்ளார்.

எனினும் இருவரது வீட்டாரும் இதற்கு சம்மதம் தெரிவிக்க மாட்டார்கள் என்பதால் மீரா 2019 ஆம் ஆண்டு பாலினமாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டார்.

இந்த அறுவை சிகிச்சைக்கு பின்னர் ஆரவ் குந்தல் என பெயர் மாற்றிக்கொண்ட அவர் அண்மையில் கல்பனாவைத் திருமணம் செய்து கொண்டார்.

இது குறித்து கல்பனா கருத்துத் தெரிவிக்கையில், “எனக்கு தொடக்கத்திலிருந்தே மீராவின் பாலினம் ஒரு தடையாகத் தெரியவில்லை. எனக்கும் அவரைப் பார்த்த முதல் நாளிலிருந்தே பிடித்திருந்தது” என்றார்.

இந்நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் டுபாயில் நடைபெறவிருக்கும் சர்வதேச கபடிப் போட்டியில் பங்கேற்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 100 ஆவது நாள் மக்கள் பிரகடனம்

வடமலை ராஜ்குமார்



இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய நூறு நாள்கள் செயல்முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம் நவம்பர் (08) காலை 10.30 மணிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் நடைபெற்றது.

இதில், திருகோணமலை மக்கெய்சர் வெளியரங்கில் நடைபெற்ற நிகழ்வில் பொதுமக்கள் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு சார்பில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் பின்வருமாறு அமைகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்களான நாம், அதிகாரப் பகிர்வு கோரிய எமது தொடர் நூறு நாள் செயல்முனைவின் நூறாவது நாளான, 8 கார்த்திகை 2022 ஆகிய இன்றைய தினம் (08), வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களுக்கான நிலைபேறான அரசியல் தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை முன்வைக்கிறோம்.

கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஆட்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களைக் கருத்திற்கொண்டும், 13 ஆவது திருத்தத்தின் சாராம்சத்தைப் பரிசீலித்தும், குறிப்பாக 2002ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் மத்தியத்துவத்துடன் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிநடத்தலில் ஜி. எல். பீரிஸ் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவால் ஒஸ்லோ உடன்படிக்கை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ‘ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு’ என்பதை சீர்தூக்கிப் பார்த்தும் இந்தப் பிரகடனம் மக்களின் குரலாக வெளிப்படுகிறது.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிராந்தியத்தில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள், தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல், மொழி, பொருளாதார, சமூக ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும்; தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், 2006இல் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலமான 13 ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு, இற்றுடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன.

இந்தக் கால இடைவெளியில், இலங்கை அரசால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதிமுகாம் வாழ்வை அனுபவித்தனர். போரால் இருப்பிடங்களும் சொத்துகளும் வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் 70ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டுவரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறோம்:

1. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு, கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்.

2. ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசால் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.

3. ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது, மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது சதவீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

4. மக்கள் பிரதிநிதிகள் சபையின் தலைமை உறுப்பினராக முதலமைச்சர், திகழ்வார்.

5. ஆளுநர் என்பவர் மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையைக் கட்டுப்படுத்தாதவராகவும் மத்திய அரசின் கௌரவ பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும்.

6. வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

7. மாகாண மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்திசார் சர்வதேச ஒப்பந்தங்களை மாகாண ஆட்சி மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் சர்வதேச வணிகம், தொழிற்றுறை அபிவிருத்தி, நகரமயமாக்கல் அடங்கலான கட்டுமான அபிவிருத்தி ஆகியன அடங்கல் வேண்டும்

8. காணி மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஏனைய அனைத்து விவகாரங்கள் சார்ந்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாகாண ஆட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.

9. மாகாண அலகுக்கான பொலிஸ், உளவுத்துறை சேவைகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்.

10. நீதித்துறை, அரச நிர்வாகம், கல்வி, பொதுச்சுகாதாரம், பொதுப்போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், எரிபொருள் அடங்கலான ஏனைய அனைத்து துறைகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு மாகாண ஆட்சிக்குள்ள அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11. தற்போது வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

12. தற்போதைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் கரையோரப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மிதக்கும் கடற்படைத்தளங்களை தேவையான கடற்பிரதேசங்களில் மத்திய அரசு அமைக்க வேண்டும். இதன்மூலம் மக்கள் காணிகள் இராணுவத்தின் வசமிருந்து விடுவிக்கப்படுவதுடன் இயல்புவாழ்வை மீளப்பெற முடியும்.

13. இலங்கையின் மத்திய அரசானது, வடக்கு, கிழக்கு மாகாண அலகு பொருளாதார பலம் அடைவதற்காக குறிப்பிட்ட காலம்வரையில் தேவையான நிதிசார் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

14. தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் சார்ந்து பொறுப்புக் கூறும் கடப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது. எனவே, சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஐ.நாவின் வழிகாட்டலில் சர்வதேச நாடுகளுடன் இணைந்து, நீதிப்பொறிமுறைகளை உருவாக்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.

15. வடக்கு, கிழக்கு மாகாண அலகானது, மாகாணத்துக்குள் வாழும் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன-மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய நிலைபேறான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

16. மத்திய அரசானது, இலங்கை நாட்டின் மக்கள் அனைவரினதும் ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க நாம் அயலிலுள்ள நட்புநாடான இந்தியாவையும், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஐ.நா. சபையையும் கோருகிறோம் என மக்கள் பிரகடனம் அமைந்திருந்தது.

இருபதுக்கு T 20 உலகக் கிண்ணம்: நியூசிலாந்தை வென்று

# இறுதிப் போட்டியில் பாகிஸ்தான்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

சிட்னியில் நேற்று (9) நடைபெற்ற நியூசிலாந்துடனான அரையிறுதிப் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன், தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, முதலாவது ஓவரிலேயே ஷகீன் ஷா அஃப்ரிடியிடம் பின் அலெனை இழந்தது. பின்னர் குறிப்பிட்ட நேரத்தில் டெவோன் கொன்வே ரண் அவுட்டானானதுடன், அடுத்து வந்த கிளென் பிலிப்ஸும் சிறிது நேரத்திலேயே மொஹமட் நவாஸிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில் வில்லியம்ஸின் 46 (42), டரைல் மிற்செல்லின் ஆட்டமிழக்காத 53 (35) ஓட்டங்களுடன் இனிங்ஸை நகர்த்திய நியூசிலாந்து 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. அப்ரிடி 4-0-24-2, மொஹமட் நவாஸ் 2-0-12-1, நசீம் ஷா 4-0-30-0, மொஹமட் வஸிம் 2-0-15-0, ஹரிஸ் றாஃப் 4-0-32-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.



பதிலுக்கு 153 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மொஹமட் றிஸ்வானின் 57 (43), பாபர் அஸாமின் 53 (42), மொஹமட் ஹரிஸின் 30 (26) ஓட்டங்களோடு 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், மிற்செல் சான்ட்னெர் 4-0-26-1, இஷ் சோதி 4-0-26-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக றிஸ்வான் தெரிவானார்.

இந்நிலையில், அடிலெய்ட்டில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் இந்தியாவும், இங்கிலாந்து மோதவுள்ளன.





# சம்பியனான கிண்ணியா அல்அமீன் வித்தியாலயம்

ஒலுமுதீன் கியாஸ்

அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் திருகோணமலை மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடாத்தப்பட்ட 16 வயதின் கீழ், ஆண்கள் பிரிவுக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணியா அல் - அமீன் வித்யாலயம் சம்பியனானது.

கிண்ணியா எழிலரங்கு மைதானம், றேஞ்சர்ஸ் மைதானம் ஆகியவற்றில் நடைபெற்ற இத்தொடரில் திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து 21 பாடசாலை அணிகள் பங்குபற்றிருந்தன.

விலகல் அடிப்படையில் நடைபெற்ற இத்தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் அல் அக்ஸா கல்லூரி அணியும், அல் அமீன் வித்தியாலய அணியும் தலா ஒரு கோலை போட்டு, போட்டியை சமநிலைப்படுத்திக் கொண்டதனால் பெனால்டி உதை மூலம் அல் அமீன் வித்தியாலயம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மூதூர் மத்திய கல்லூரி அணியும், பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலை அணியும் தலா இரண்டு கோல்களைப் பெற்று போட்டியை சமநிலைப்படுத்திக் கொண்டதனால் இப்போட்டியின் வெற்றியும் பெனால்டி உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. பெனால்டியில் மூதூர் மத்திய கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இறுதிப்போட்டியில், மூதூர் மத்திய கல்லூரி அணியும், கிண்ணியா அல் அமீன் வித்தியாலய அணியும் மோதிக்கொண்டதில், இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டதனால் போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது. பெனால்டியில் அல் அமீன் வித்தியாலயம் சம்பியனானது.

இந்த இரண்டு அணிகளும் அகில இலங்கை பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதாகவும், அதற்காக இரு அணிகளின் விபரங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் கிண்ணியா உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவருமான ஏ.எல்.எம். நபீல் தெரிவித்தார்.



ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

# வொல்வ்ஸ்பேர்க்கிடம் தோற்ற டொட்டமுண்ட்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், வி.எஃப்.எல் வொல்வ்ஸ்பேர்க்கின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் தோற்றது.

# குணதிலகவின் செலவுகளைப் பொறுப்பேற்கவுள்ள கிரிக்கெட் சபை



அவுஸ்திரேலியாவில் தனுஷ்க குணதிலகவின் சட்டச் செலவுகளைத் தாங்கள் செலுத்தவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இலங்கை கிரிக்கெட் சபையின் விதியை குணதிலக மீறினாரா என்பது இன்னும் தெளிவில்லாமலுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட இம்மாதம் 2ஆம் திகதி வெளியே செல்லத் தடை இருந்ததாக கிரிக்கெட் சபையின் செயலாளர் அஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

குணதிலகவுக்கு உதவ வேண்டிய ஒப்பந்தக் கடப்பாடு எதுவும் கிரிக்கெட் சபைக்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெப்ப நிலை அதிகரிப்பால் 15,000 பேர் உயிரிழப்பு

ஐரோப்பாவில் நடப்பாண்டில் மாத்திரம் வெப்பநிலை அதிகரிப்பால் சுமார் 15,000 பேர் உயிரிழந்துள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அதிகபட்சமாக ஜேர்மனியில் 4 ,500 பேரும் ஸ்பெயினில் 4,000 பேரும், பிரித்தானியாவில் 3,200 பேரும், போர்த்துக்கலில் 1000 பேரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த ஜூன் மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரை, வெப்பத்தின் தாக்கத்தால் சுமார் 11,000 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





அமெரிக்கா

# மிளகாய் உண்பதில் உலக சாதனை

உலகின் மிகக் காரமான கரோலினா ரீப்பர் மிளகாய்களை 33 வினாடிகளில் உட்கொண்டு இளைஞர் ஒருவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

கலிஃபோர்னியாவைச் சேர்ந்த கிரிகோரி ஃபோஸ்டர் என்ற இளைஞனே 10 காரமான கரோலினா ரீப்பர் மிளகாய்களை 33.15 செக்கன்களில் முழுவதுமாக உண்டு முடித்து தனது முந்தைய சாதனையை முறியடித்துள்ளார்.

நாம் உணவில் எடுத்துக் கொள்ளும் காரத்தை ஸ்கோவில் ஹீட் யூனிட்கள்(Scoville heat units)என்ற அலகில் மதிப்பிடப்படுகின்றது.

அந்த வகையில் கரோலினா ரீப்பர் மிளகாய் ஒன்றில் உள்ள காரத்தின் அளவு 16 ,41, 184 SHU என்பது குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# பிரபல ஹொலிவூட் நடிகர் காலமானார்

புகழ்பெற்ற 'carry on' தொடரில் நடித்த பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல ஹொலிவூட் நடிகர் லெஸ்லி பிலிப்ஸ்(Leslie Phillips) தனது 98 ஆவது வயதில் உடல் நலக் குறைவால் கடந்த 7 ஆம் திகதி காலமானார்.

தனது 80 ஆண்டுக்கால திரையுலக வாழ்க்கையில் 200க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் நடித்துள்ள லெஸ்லி பிலிப்ஸ் , உலகப் புகழ்பெற்ற ஹாரிபொட்டர் தொடர்களிலும் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



நேபாளம்

# நேபாளத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; 6 பேர் உயிரிழப்பு

நேபாளத்தின் டோட்டி மாநிலத்தில் நேற்றைய தினம் (09) அதிகாலை சக்திவாய்ந்த நில நடுக்கமொன்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6.6 ஆகப் பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏராளமான வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. அத்துடன் இடிபாடுகளில் சிக்கி இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் காணமற்போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியின் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நிலநடுக்கத்தின் அதிர்வுகள், புதுடெல்லி வரை உணரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உக்ரேன்

# அதிரடி அறிவிப்பை வெளியிட்ட உக்ரேன் ஜனாதிபதி

உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி , உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 8 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இந்நிலையில் தங்களது நிபந்தனைகளை ஏற்றால் ரஷ்யாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி (volodymyr zelensky) தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஸெலென்ஸ்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் " உக்ரேனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ரஷ்யாவுக்கு நாங்கள் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்தோம். ஆனால், அந்த அழைப்புக்கு புதிய பயங்கரவாதத் தாக்குதல்கள், குண்டுவீச்சுகள் மூலமும் மிரட்டல்கள் மூலமும் ரஷ்யா பதிலளித்து வந்தது.

எனவே, உண்மையான அமைதிப் பேச்சுவார்ததையில் ஈடுபட ரஷ்யாவை உலக நாடுகள் வற்புறுத்த

**" எங்களது இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால், ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கின்றோம் உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி (volodymyr zelensky) தெரிவித்துள்ளார்.**

வேண்டும். அந்தப் பேச்சுவார்த்தையில் நாங்கள் ஈடுபட வேண்டுமென்றால், முதலில் தாங்கள் ஆக்கிரமித்துள்ள உக்ரேன் பகுதிகளிலிருந்து ரஷ்யப் படையினர் வெளியேறி, உக்ரேனின் இறையாண்மையை நிலைநாட்ட வேண்டும்.

அத்துடன், ரஷ்யா நடத்திய தாக்குதலால் உக்ரேனில் ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு அந்த நாடு இழப்பீடு அளிக்க வேண்டும். போர் குற்றங்களில் ஈடுபட்ட தங்கள் நாட்டு இராணுவத்தினருக்கும் ரஷ்யா தண்டனை பெற்றுத் தருவதுடன், அதுபோன்ற போர்க் குற்றங்கள் இனி நிகழாது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

எங்களது இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால், ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கின்றோம் " எனத் தெரிவித்துள்ளார்.




அமெரிக்கா

# 15ஆம்திகதி முக்கிய அறிவிப்பு; ட்ரம்ப் அதிரடி

எதிர்வரும் 15ஆம் திகதி முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிடப் போவதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

2016 முதல் 2020 ஆம் வருடம் வரை நான்கு வருடங்கள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் டொனால்டு ட்ரம்ப்.

இவரது ஆட்சி காலத்தில் வடகொரியா உடன் நட்பு, இஸ்ரேல் அரபு நாடுகள் இடையேயான நட்பை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

2020 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ட்ரம்ப் தோல்வியடைந்தார்.

இச் சூழலில் அந்த நாட்டின் ஓஹியோ மாகாணத்தில் ஆதரவாளர்கள் மத்தியில் நேற்றைய தினம் பேசிய ட்ரம்ப் "நான் வரும் 15ஆம் திகதி ஃப்ளோரிடா மார்-ஏ-லகோவில் வைத்து மிகப்பெரிய அறிவிப்பு ஒன்றை வெளியிடப் போகிறேன்" என தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 9 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.